OS.No.81/2021

PW 1–ஆறுமுகம்

த/பெ.

நாள். 19.06.2025.

<u>வாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. முதல் பிரதிவாதி என் அண்ணன் மனைவி, இரண்டாவது பிரதிவாதி என் அண்ணன் மகள் என்றால் சரி. என் அண்ணன் பெயிண்டர் ஆகவும் வேலை செய்து வந்தார் அதே சமயத்தில் பனியன் கம்பெனியில் நூல் வாங்கி பிரித்து அதனை விற்பனை செய்தும் வந்து கொண்டிருந்தார் என்றால் ஆமாம்.

2. அதன் மூலமாகத்தான் அவருக்கு வருமானம் வந்து கொண்டு இருந்தது என்றும் சொன்னால் சரி. 18.11.1991 தேதியன்று என் அண்ணன் ரூபாய் 7200 கொடுத்து செட்டிபாளையம் கிராமத்தில் சர்வே நம்பர் 224/1, 224/2 மற்றும் 224/3 என்றும் அதன் விஸ்தீரணம் 1200 சதுர அடி மனை ஒன்றை வாங்கி இருந்தார் என்று சொன்னால் அதில் நானும் பணம் கொடுத்திருந்தேன்.

3. வா.சா.ஆ.1 ஆவணத்தில் ராஜேந்திரன் என்ற நபரும் பாலசுப்பிரமணியம் என்ற நபரும் சாட்சி கையெழுத்து போட்டு இருக்கிறார்கள் என்று சொன்னால் எனக்குத் தெரியாது.வா.சா.ஆ.1 ஆவணத்தில் என் அண்ணன் கிரயத்தொகை கொடுத்து வாங்கியதாக தான் வாசகம் இருக்கிறது என்றும் நான் எந்த கிரயத் தொகையும் கொடுத்ததாக வாசகம் எதுவும் காணப்படவில்லை என்று சொன்னால் சாட்சி ஆவணத்தை பார்த்துவிட்டு வாசகம் ஏதும் இல்லை என்று தான் கூறுகிறார் .

4. வா.சா.ஆ.1 ன் படி மேற்படி தாவா சொத்தானது என் அண்ணனின் சுயராஜ்ஜித சொத்து என்று சொன்னால் சரியல்ல .என்னுடைய அண்ணன் தாவா இடத்தை

காலியிடமாக தான் வாங்கினார் என்றும் அதனை வாங்கிய பின்பு காலி இடத்தில் தன்னுடைய வருமானத்தை வைத்து கட்டிடங்கள் கட்டியிருக்கிறார் என்று சொன்னால் அந்த கட்டிடங்களுக்கு நானும் பணம் கொடுத்திருக்கிறேன் .

5. முதல் பிரதிவாதி கோரல் ரீப் என்ற நிறுவனத்தில் வேலை செய்து வந்தார் என்று சொன்னால் சரிதான் .பிரதம மந்திரியின் PMAYU திட்டத்தின் கீழ் தான் வீடு கட்டப்பட்டு இருக்கிறது என்று சொன்னால் சரிதான் .அந்தத் திட்டத்தின் கீழ் பயனாளரின் பெயர் விஸ்வநாதன் என்று ஒரு கல்வெட்டில் பொறிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் ஆமாம். இதனை வைத்து மேற்படி கட்டிடத்தை விஸ்வநாதன் தான் கட்டியிருக்கிறார் என்று சான்றாக கொள்ளலாம் என்று சொன்னால் இது சரியல்ல நானும் அந்த கட்டிடம் கட்டுவதற்கு பணம் கொடுத்திருக்கிறேன்.

6. என் அண்ணன் இந்து இம்பேக்ஸ் என்ற நிறுவனம் நடத்தி வந்தார் என்றால் இல்லை. இந்திராணி செக்கிங் சென்டர் என்ற நிறுவனமும் என் அண்ணன் தான் நடத்தி வந்தார் என்று சொன்னால் இல்லை. தன்னுடைய சொந்த சம்பாத்தியத்தில் தான் என் அண்ணன் இந்த தாவா சொத்தில் ஒரு கிழக்கு பார்த்த வீடு தார்சு கட்டிடம் மற்றும் ஒரு வடக்கு பார்த்த தார்சு கட்டிடம் கட்டி இருக்கிறார் என்று சொன்னார் என்னுடைய சம்பாத்தியத்தில் தான் கட்டினார் .

7. மின் இணை எண் 54 என் அண்ணன் பெயரில் தான் இருந்தது என்று சொன்னால் சரிதான் தற்போது பெயர் மாற்றம் செய்து விட்டேன் .தற்போது அந்த வீட்டிற்கான வரி ரசீதுகள் அனைத்தும் பிரதிவாதிகளின் பெயரில்தான் இருக்கிறது என்று சொன்னால் சரிதான்வழக்கு போட்ட பின்பு மாற்றியிருக்கிறார்கள்.

8. 10.6.2020 லேயே அதாவது வழக்கு தாக்கம் செய்வதற்கு முன்பே பிரதிவாதிகள் பெயரில்தான் தண்ணீர் வரி ரசீதும் சொத்து வரி ரசீதும் இருந்திருக்கிறது என்று சொன்னால் சரியல்ல.நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.என் அண்ணன் தன்னுடைய சொந்த சம்பாத்தியத்தை தன் வங்கி கணக்கில் தான் வைத்திருந்தார் என்றும் அதனை வைத்து தான் வீடு கட்டி இருந்தார் என்றும் சொன்னால் சரி அல்ல.மே பிரதம மந்திரியின் PMAYU திட்டத்தின் கீழ் வந்த தொகையும் அவருடைய சேமிப்பு கணக்கிற்கு தான் வந்தது என்று சொன்னால் சரியல்ல .

9. நான் தற்போது இந்த வழக்கை 480 சதுர அடி அளவிற்கு மட்டுமே பரிகாரம் கோரி தாக்கல் செய்திருக்கிறேன். பிரதிவாதிகள் தங்களுடைய எதிர் வழக்கில் மொத்த வழக்கு சொத்திற்கும் அதாவது 1200 சதுர அடி நிலம் மற்றும் அதில் இருக்கும் கிழக்கு மற்றும் வடக்கு பார்த்த வீடுகளுக்கும் சேர்த்து தான் வழக்கு போட்டு இருக்கிறார்கள் என்று சொன்னால் சரிதான்.

10. வா.சா.ஆ.4 தான செட்டில்மெண்ட் ஆவணமானது தாளவாடியில் இருக்கும் பாலமுருகன் என்ற ஸ்டாம் வென்டரிடம் வாங்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் சரிதான். ஆனால் வா.சா.ஆ.1 ஆவணம் அமிர்தவல்லி என்ற திருப்பூரைச் சார்ந்த ஸ்டாம்ப் வென்டரிடம் வாங்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் சரிதான். திருப்பூரில் இருந்து தாளவாடி என்பது சுமார் 150 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கும் என்றாலும் சரிதான். தாளவாடி என்பது மலைப் பிரதேசம் என்றால் சரிதான் பொதுவாக ஆறு மணிக்கு மேல் மாலையிலும் காலை 6 மணிக்கு முன்பும் வாகனங்கள் அனுமதிக்கப்படுவது சிரமம் என்றாலும் சரிதான்

.

11. அந்த ஸ்டாம்ப் பேப்பரை அதாவது வா.சா.4 ல் எழுதப்பட்டு இருக்கும் ஸ்டாம்ப் பேப்பரை திருப்பூரை விட்டுவிட்டு ஏன் தாளவாடியில் போய் வாங்க வேண்டும் என்று கேட்டால் அண்ணன்தான் வாங்கி இருந்தார் எனக்கு தெரியவில்லை.

12. ஏற்கனவே திருப்பூரில் 1991 இல் ஸ்டாம்ப் பேப்பர் வாங்கி இருந்த நிலையில் அவர் தாளவாடி சென்று ஸ்டாம்ப் பேப்பர் வாங்க வேண்டிய அவசியம் எதுவும் இல்லை என்று சொன்னால் சரி அல்ல. வா.சா.ஆ.4 ல் கண்டுள்ள ஸ்டாம்ப் பேப்பர் ஆனது என் அண்ணனால் வாங்கப்பட்டது அல்ல என்றும் அதனை நானே வாங்கி ஆவணத்தை உருவாக்கி இருக்கிறேன் வழக்கிற்காக என்று சொன்னால் சரியல்ல.

13. பொதுவாக தான செட்டில்மெண்ட் எழுதினால் அது பதிவு செய்யப்பட வேண்டும் என்று எனக்கு தெரியும் .மேற்படி வா.சா.ஆ.4 ஸ்டாம்ப் பேப்பரில் எழுதப்பட்டுள்ள ஒப்பந்தத்தில் எந்தவித பிரதி பிரயோஜனமும் இன்றி காலி இடத்தை நான் எழுதிக் கொடுத்ததாக தான் வாசகம் காணப்பட்டிருக்கிறது என்று சொன்னால் சரிதான். அப்படித்தான் காணப்படுகிறது.

14. ஆனால் சொத்து விபரத்தில் தார்சு கட்டிடம் என்று குறிப்பிட்டு சொல்லப்பட்டிருக்கிறது என்றும் சொன்னால் சரிதான் .வா.சா.ஆ.4 ஆவணம் யாரால் எழுதப்பட்டது பெயர், விலாசம், உரிமை எண் என்று கூட குறிப்பு இல்லை என்று சொன்னால் சரிதான். சாட்சிகள் எந்த ஊரை சேர்ந்தவர்கள் என்றால் அவர்களுடைய விலாசம் எதுவும் இல்லை என்று சொன்னால் சரிதான் .வா.சா.ஆ.4 அடிபடையில் எனக்கு எந்தவித உரிமையோ பாத்தியமோ கிடையாது என்று சொன்னால் சரியல்ல.

15. என்னுடைய தாவா தள்ளுபடி ஆக வேண்டுமென்றால் சரி அல்ல என்னுடைய வழக்கின்படியே எனக்கு வழக்கு சொத்தில் எந்தவித உரிமையோ பாத்தியமோ கிடையாது என்று சொன்னால் சரி அல்ல .

16. ஒன்று இரண்டு பிரதிவாதிகள் கடந்த 21/7/2020 ஆம் தேதி அன்று என்னுடைய வீட்டில் அத்துமீறி நுழைந்து என்னை வெளியேற்றினார்கள் என்று நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல .

17. என் அண்ணன் 10.7.2019 தேதியில் இறந்து போனார் என்று சொன்னால் சரிதான் அவருக்கு உடம்பு சரியில்லாமல் இருந்து போனார் அவருக்கு வாரிசுகள் என்று ஒண்ணாம் பிரதிவாதி மனைவியும் இரண்டாம் பிரதிவாதி மகளும் இருக்கிறார்கள் என்றால் ஆமாம்.இரண்டாம் பிரதிவாதி கல்லூரியில் பயின்று வருகிறார் என்றாலும் சரிதான் .அவர்கள் இருவரும் மேற் சொன்ன வழக்கு சொத்தில் தான் முகவரியில் குடியிருந்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல .

18. மேலும் ஒன்று இரண்டு பிரதிவாதிகள் பெயரில் தான் எதிர்பாத்திய கோர் உரிமை சொத்துக்கான பட்டா பிரதிவாதிகள் பெயரில்தான் இருக்கிறது என்று சொன்னால் சரியல்ல .பிரதிவாதிகள் தான் அந்த சொத்திற்கு தண்ணீர் வரி மற்றும் வீட்டு வரி கட்டி வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. மேலும் பிரதிவாதிகள் 21/7/2020 ஆம் தேதி அன்று பிரதிவாதிகளின் சுவாதீனத்தை நான் இடையூறு செய்தேன் என்று சொன்னால் சரியல்ல .

19. ஒன்று இரண்டு பிரதிவாதிகள் அவர்களுடைய கணவர் மற்றும் அப்பா என்ற வாரிசு உரிமை அடிப்படையில் தான் சொத்தின் மீது உரிமை வேண்டும் என்று விளம்புகை கேட்டு இருக்கிறார்கள் என்று சொன்னால்

சரிதான்.வேண்டுமென்றே நான் பொய் வழக்கு போட்டிருப்பதால் பிரதிவாதிகளுக்கு நான் செலவு தொகை கொடுக்க கடமைப்பட்டிருக்கிறேன் என்றால் சரியில்லை.

20. நான் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று பிரதிவாதிகள் தாக்கல் செய்திருக்கும் எதிர்பாத்திய கோர் உரிமை வழக்கானது அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

21. உண்மையிலேயே நான் சுவாதி இனத்திலிருந்து இருந்தால் நான் பிராதில் மின் இணைப்பு எண்ணை குறிப்பிட்டு சொல்லி இருப்பேன் என்றும் நான் சுவாதீனத்தில் இல்லாததால் தான் மின் இணைப்பு எண் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியில்லை. தற்போது வழக்கு சொத்தில் காலியிடம் எதுவும் கிடையாது என்றால் சரிதான். எல்லா இடமும் கட்டிடமாக தான் இருக்கிறது .

**மறுவிசாரணை இல்லை**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

V.SREE VIDYA

Digitally signed by V.SREE VIDYA
DN: cn=V.SREE VIDYA, ou=Judicial Officer, o=Principal Subordinate Judge,, l=Tiruppur, st=Tamil Nadu, c=+91

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.